## ஆகஸ்ட் - 17

**"ஆவியை அவித்துப் போடாதிருங்கள்." - 1தெச 5 : 19**

கர்த்தருடைய ஜனங்களிடத்திலிருக்கிற கர்த்தரின் ஆவி, கர்த்தருக்காகவும் அவருடைய விவகாரங்களில் சம்மந்தப்பட்டிருக்கிற எல்லாருக்காகவும் இருக்கிற தெய்வீகமான ஒரு அன்பின் ஜீவாலைக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. பரிசுத்த ஆவியைப் பெறும்போது இந்த ஜீவாலை ஒவ்வொருவரிலும் தனித்தனியாக தெய்வீக செய்தியின் மூலமாக மூடப்படுகிறது. அந்த ஆவியின் நடத்துதலுக்கடியில் ஒன்று சேர்ந்த சபைக்கு இது உரித்தாயிருக்கிறது. சபை அறிவிலும், அன்பிலும், கர்த்தரோடு ஐக்கியத்திலும் வளருவதற்கு சமமாக இந்த "தெய்வீகமான அன்பின் ஜீவாலை, மறைக்க கூடாதபடிக்கு மலையின் மேல் வைக்கப்பட்டிருக்கிற ஒரு பட்டணமாக உலகத்திற்கு ஒரு ஒளியாக இருக்கும். **- Z ’03, 25(R 3135)**

இந்த வாக்கியத்திலிருந்து பரிசுத்த ஆவி யெகோவா அல்ல என்பது தெளிவாகத் தெரிகிறது. ஏனென்றால், அப்படியிருக்குமானால், இவ்விதமாக புத்தி சொல்லுதல் அனாவசியமானதும் அபத்தமானதாகவும் இருக்கும். சர்வ வல்லவரை சுயமாக ஜீவித்திருக்கிற ஒருவரை அழிக்காதீர்கள் என்று நமக்கு புத்தி சொல்லுவது எவ்வளவு முட்டாள்தனமானதும், அனாவசியமானதாகும்! நம்மில் இருக்கிற கர்த்தரின் குணம்தான் (மனச்சார்பு) பரிசுத்த ஆவி என்று புரிந்து கொள்ளும் போது, இந்தப் போதனை ஞானமுள்ளதாயும் அவசியமானதாயுமிருக்கிறது என்பதை அறிந்து கொள்ளுகிறோம். மெழுகுவர்த்தியின் வெளிச்சம் அணைக்கப்படக் கூடியது போல, பாவமோ, வஞ்சகமோ, தன்னலமோ, அல்லது உலகத்தனமோ நம்மீது ஆதிக்கத்தைப் பெறும்போது, அந்த பரிசுத்த வெளிச்சம், பரிசுத்த ஆவி அணைத்துப் போடப்படுகிறது. திரும்பவும் ஏரியச் செய்யக்கூடிய மெழுகுவர்த்தியைப் போல் அல்லாமல் ஒருதரம் அணைக்கப்பட்ட பரிசுத்த ஆவியைத் திரும்பவும் மூட்ட முடியாது. ஆகையால், இந்த விலைமதிக்க முடியாத வெளிச்சத்தை அணைத்துப் போடாதிருக்க நாம் எல்லோரும் ஜாக்கிரதையாயிருப்போமாக. இல்லாவிட்டால், நாம் நிரந்தர இருளிலிருப்போம். அந்த இருள் எவ்வளவு பெரிதாக இருக்கும்! **- P ’33, 111.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**ரோம 8:1-16; 1கொரி 2:10-16; ஏசா 11:2,3; யோவா 7:39; 1:12,13; கலா 5:22,23;எபே 1:17,18; 1யோவா 4:1,6; 2தீமோ 1:7; எபே 4:30; ஏசா 7:13; 63:10.**

**கோபுர வாசிப்பு : Z ’12, 343 (R 5129)**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் ஆவியைப் பெருகச் செய்தேனா? அல்லது அவித்துப்போட்டேனா? எவ்வாறு? அதில் அனுகூலமாயிருந்ததும், பிரதிகூலமாயிருந்ததும் எவை?**